**In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.**

O.S.No.145/2023 தேதி- 11.03.2026
(PW.2) – ஜெயசாமுவேல்

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை-**

1. இந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டு வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் வழிப்பாதை கேட்டு தாக்கல் செய்துள்ளார். எனக்கு தமிழ் மற்றும் ஆங்கிலம் எழுத, படிக்க தெரியும் என்றால் தெரியும். என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிரூபண வாக்குமூலம் வாதியின் வழக்கறிஞர் அலுவலகத்தில் வைத்து தான் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். வாதி தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை.

2.வாதி தாக்கல் செய்திருந்த நிரூபண வாக்குமூலத்தில் உள்ள அதே சங்கதிகளை கொண்டு என் பெயரை மட்டும் மாற்றி என் நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் சென்னையில் ஒரு கம்பெனியில் தினக்கூலியாக வேலை செய்து வருகிறேன். என்னுடைய மாத வருமானம் எவ்வளவு என்றால் ரூ.15,000/- ஆகும். இவ்வழக்கின் பிரதிவாதியான தங்கபேபி என் அப்பாவின் உடன்பிறந்த சகோதிரி என்றால் சரிதான். வாதி என் அப்பாவின் உடன்பிறந்த சகோதரர் என்றால் சரிதான்.

3.இந்த வழக்கு பட்டிகை சொத்து புன்செய் நிலம் என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்தின் தொட்ட கண்டம் என்னுடைய கண்டம் என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் எந்த பரிகாரமும் கேட்கவுமில்லை, நான் இந்த வழக்கில் தரப்பினரும் இல்லை என்றால் சரிதான். பிரதிவாதியின் கணவர் எந்த வருடத்தில் வழக்கு பட்டிகை சொத்தை விலைக்கு வாங்கினார் என்று தெரியுமா என்றால் தெரியாது, நான் அப்போது சிறுவயதில் இருந்தேன் என்றால் சரிதான்.

4.எனக்கு உரிமைப்பட்ட சொத்தை எவ்வளவு தொகைக்கு பிரதிவாதியிடமிருந்து விலைக்கு பெற்றேன் என்றால் ரூ.5,00,000/- ஆகும். மொத்த எவ்வளவு சொத்து பிரதிவாதிக்கும் அவருடைய பிள்ளைகளுக்கும் உரிமைப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. எனக்கும், சித்தப்பாவையும் தவிர வேறு

யாருக்கும் பிரதிவாதி சொத்தை விலைக்கு கொடுக்கவில்லை என்றால் சரிதான். நாங்கள் இருவரும் உறவினர் என்ற காரணத்தினால் தான் எங்களுக்கு பிரதிவாதி சொத்தை விலைக்கு கொடுத்தார் என்றால் சரிதான், ஆனால் பாதையில்லாமல் விற்றுவிட்டார்.

5.வேறு யாருக்கும் பிரதிவாதி சொத்தை விற்கும் எண்ணம் இல்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் பிராதை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். நிரூபண வாக்குமூலத்தில் A, B, C, D மனைபிரிவாக பிரித்து 15 அடி அகலமுடைய பாதையாக வழங்கப்பட்டதாக சொல்லியுள்ள நிலையில், அதை நிரூபிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எனக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட விலை ஆவணத்திலும் வழிப்பாதை குறித்தான எந்த தகவலும் இல்லை என்றால் சரிதான்.

6.வீட்டு மனை இல்லாத புன்செய் சொத்துக்களுக்கு மனைகளாக பிரிக்க அனுமதி வழங்கப்படாது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் Dominant Owner, Servient Owner என்று குறிப்பிட்ட நிலையில், அதை பற்றி விவரங்கள் தெரியுமா என்றால் தெரியாது. சொத்தை நான் விலைக்கு வாங்கவில்லை என்றாலும், என்னுடைய மாமி நான் மாற்றுதிறனாளி என்பதால் இலவசமாக வழங்கப்பட்ட இடம் என்றால் சரியல்ல. வாதிக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையிலேயே வேறு பாதை உள்ளதால் தான் நான் இந்த வழக்கில் கட்சியாக சேர்க்கப்படவில்லை என்றால் சரியல்ல.